control of mosquitoes has not been properly done. As already pointed out by me there was one case a week of 'A' Influenza and it was not in large numbers. The present type of influenza fever occurs every year.

(Dr. Hande rose. Mr. Speaker sounded the gong.)

DR. H. V. HANDE: The Hon. Minister said that the hon. Member himself is a doctor. I want to clarify one point. There should not be any misunderstanding that I am not aware of the fact stated by the Minister. I know that Influenza . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பெர்சனல் எக்ஸ்ப்ளனேஷன் என்றால் உங்களைப்பற்றி ஏதாவது சொன்னால் நீங்கள் விளக்கம் சொல்லவேண்டும். தயவு செய்து உட்காருங்கள்.

(ஆ) திருச்சி மாவட்டம் வெள்ளியணைப் பகுதியில் விவசாயிகளிடமிருந்து கடன் வசூலைத் தள்ளிவைத்தல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து திரு. பெ. சௌந்தரபாண்டியன் 41-வது விதியின் கீழ் அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம் வெள்ளியணைப் பகுதியில் போதுமான மழை பெய்யாத காரணத்தால் எவ்வித விவசாயமும் செய்ய முடியாமல் விவசாயிகள் வருமானம் இன்றி மிகவும் சிரமப்படுவதால், அரசுக்கு செலுத்த வேண்டிய கடனை வசூல் செய்ய, விவசாயிகளுக்குத் தொல்லை கொடுத்துவருகிற நிலை ஏற்பட்டிருப்பதால், ஜப்தி போன்ற நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்திவைத்து கடன் வசூலை சிறிது காலம் தள்ளி வைக்கவேண்டும் என்பது பற்றிய அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியாளர் தனது 19—11—1973-வார இறுதிக்கான காலநிலை அறிக்கையில், கரூர் தாலுக்காவில்

1973 நவம்பர் 26]

போதுமான மழையில்லை என்றும், மழையினால் நிரம்பும் குளங்களில் போதுமான தண்ணீர் இல்லையென்றும், ஆனாலும் ஆற்றுக் கால்வாய்களில் போதுமான தண்ணீர் இருப்பதாகவும், அறிவித்துள்ளார். ஏற்கனவே வருவாய்த்துறை 11—6—1973 ஆம் நாளன்று வெளியான 3389-ஆம் எண் அரசு ஆணையில் எல்லா மாவட்ட ஆட்சியாளர்களுக்கும் எந்தெந்த பகுதிகளில் மோசமான பருவ நிலை அல்லது இயற்கையின் சீற்றத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதோ, அந்த பகுதிகளில் விவசாயிகளிடம் இருந்து கடன் தவணைகள் குறித்து நிவாரணமோ சலுகையோ அளிக்குமாறு கேட்டு முறையீடுகள் வந்தால், அவற்றை உடனடியாக பரிசீலிக்குமாறும், உண்மையில் இடர்பாடு அடைந்துள்ளவர்களுக்கு விதிகளுக்கு ஏற்ப அவசியமென கருதுகிற நிவாரணத்தை அல்லது சலுகைகளை வழங்கலாம் என்று உத்திரவிடப்பட்டுள்ளது. மேலும் இந்த முறையீடுகள் குறித்து மாவட்ட ஆட்சியாளர்கள் இறுதி ஆணை பிறப்பிக்க முடியாத நேர்வுகளில் அவற்றை தமது பரிவுரைகளுடன் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப வருவாய்த்துறை வாரியத்திற்கோ அல்லது அரசுக்கோ அனுப்பி ஆணைகள் பெறவேண்டும் என்றும் மேலே குறிப்பிட்ட அரசு ஆணையில் உத்தரவிடப்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்ட ஆணைகளின் படி திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியாளர் எந்தெந்த பகுதிகளில் பருவநிலை மோசம் அடைந்துள்ளதோ அந்தப் பகுதிகளிலுள்ள விவசாயிகளின் இடர்பாடுகளை தவிர்க்க தகுந்த நடவடிக்கைகள் எடுப்பார். ஆதலால் இது குறித்து இந்த அவையில் விவாதம் தேவையில்லை என்று கருதப்படுகிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டுள்ள வெள்ளியணைப் பகுதியில் எந்தவிதமான வருவாயும் இல்லை. வருவாய்த் துறை அதிகாரிகள் அரசாங்கம் பிறப்பித்துள்ள ஆணையில் கடன்களை விரைவில் வசூல் செய்யவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளதாக குறிப்பிடுகிறார்கள். இனிமேலாவது இதுபோன்ற பின்தங்கிய மழை இல்லாத பகுதிக்கு கடன் வசூலை தள்ளிவைக்கவேண்டும் என்று அரசாங்கம் மறு ஆணை பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த அரசின் ஆணையின் முக்கிய பகுதியை படித்தால் உதவியாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1973 நவம்பர் 26

'In the areas affected by adverse seasonal conditions or other natural calamities if representations are received for the grant of relief or concessions in repayment of loans that are due, the Collectors are requested to examine such representations immediately. In genuine cases of hardship, the Collector concerned shall grant such relief or concession as he considers necessary in accordance with the rules. In cases of representations on which he cannot pass orders, he would submit such representations to the Board of Revenue or the Government as the case may be with his recommendations thereon'.

எனவே இந்த ஆணையின் அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தெரிவிக்கப் பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதை மாவட்ட ஆட்சித் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், நிச்சயம் நடவடிக்கை எடுப்பார் என்று நான் கருதுகிறேன்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : சென்ற மாதம் நானே நேரில் சென்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களையும், வருவாய்த் துறை அதிகாரியையும் சில பொது மக்களோடு சந்தித்து விவரத்தை எடுத்துச் சொன்னேன். அரசாங்கத்தின் ஆணையை என்னிடம் காட்டினர். இது போன்று அனுதாபச் செய்தி எதுவும் சொல்ல வில்லை. ஆகவே, இனிமேலாவது அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப் பினர் அவர்களின் கேள்வியும், என்னுடைய பதிலும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கவனத்திற்கு இதைக் கொண்டு வருகிற நிலை ஏற்பட்டிருப்பதால், நான் படித்ததிலிருந்து உரிய நடவடிக்கை எடுப்பார் என்று கருதுகிறேன்.

5. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) தமிழ்நாடு 1973-ம் ஆண்டு, நகர-நாட்டுப்புற அமைப்பு (திருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, தமிழ்நாடு 1973-ம் ஆண்டு, நகர-நாட்டுப்புற அமைப்பு (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.